# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பாடுபொருள் மாற்றங்கள்

தொகுதி – II



பதிப்பாசிரியர்கள்
முனைவர் க. முருகேசன்
முனைவர் சு. குமரன்
முனைவர் ஆர். மோகனதாஸ்

# பொருளடக்கம்


126. **K. Pradeep** 609
Pseudo Identity of Women Image in Sila Nerathil Sila Manitharkal (Some time, Some people): A Visual and Discourse Analysis Study

127. **முனைவர் மு. நாகராஜன்** 614
அறநூல்களில் கற்றோரின் குணநலன்களும் பாடுபொருள் மாற்றங்களும்

128. **மு. ஜெயலட்சுமி** 620
அகநானூற்றுக் கொடிப்பூக்களில் பாடுபொருள் மாற்றங்கள்

129. **அ. ராஜி** 626
கல்கியின் சிவகாமியின் சபதத்தில் கலைக் கூறுகள்

130. **வெ. மைதிலி** 631
புதிய தலைமுறையில் சூழலியல் மேம்பாடுகள்

131. **முனைவர் ந. இரஞ்சன்** 635
நாட்டுப்புற விளையாட்டில் அகத்திணையும் புறத்திணையும்

132. **சா. பூங்கொடி** 639
சங்க இலக்கியத்தில் பாடுபொருள் கூறுகள்

133. **S. Sakthivel** 645
Problems and Issues with Unicode for Tamil language

134. **நா. செந்தில்** 650
நீரிழிவுநோயின் குணமும் மருந்தும் - 'குணவாகடம்' சுவடியை முன்வைத்து

135. **ர. ரதி** 654
தொல்காப்பிய பெருந்திணையில் கருத்தியல் மாற்ற வாசிப்புநிலைகள்

136. **கா. காமாட்சி** 660
இலக்கண நூல்களின் பாடுபொருள் நோக்கில் சார்பெழுத்துக்கள்

137. **திரு. க. தங்கவேலு** 664
இல.செ.கந்தசாமியின் புதினங்களின் பாடுபொருள்களில் காதல்

138. **முனைவர் சு. அட்சயா** 669
கலித்தொகையில் உளவியல் (உள்ளஇறுக்கம்)

# 127. அறநூல்களில் கற்றோரின் குணநலன்களும் பாடுபொருள் மாற்றங்களும்

முனைவர் மு. நாகராஜன்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோவை - 641 029.

## கற்றோரின் குணநலன்கள்

கல்வி கற்பதன் நோக்கமே பல்வேறு நற்குணங்களைப் பெறுவதுதான். அதாவது கற்றோரிடம் பல்வேறு நற்குணங்கள் குடிகொண்டிருக்கும். அவர்கள் கற்ற கல்வி அவர்களைப் பண்படுத்தி, நல்லோர்களாக வல்லோர்களாக மாற்றும். சிறந்த முறையில் கல்வி கற்ற ஒருவரிடம் காணப்படும் உயர் பண்புகளாக அற இலக்கியங்கள் பல்வேறு பண்புகளைச் சுட்டிக் காட்டுகின்றன. அவையாவன; பிறருடைய பொருளை விரும்பாமை, பிறருக்குச் சினம் தோன்றும் வகையில் கடுஞ்சொல் கூறாமை; இழிவான சொற்களை உரையாமை; செருக்கின்றி நடத்தல்; பயனை எதிர்பார்க்காமல் உதவுதல், பிறருடைய பிழையினைப் பொறுத்தல்; இன்னா செய்தவருக்கும் நன்மையைச் செய்தல் போன்றவையாகும்.

கற்றோரின் குணநலன்களை இவ்வாறு வரிசையிட்டுத் தனித்தனியே கூறினும் அவை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமையும் பண்பு நலன்கள் சில உள்ளன. அதாவது அடக்கமுடைமை, பொறையுடைமை, சொல்வன்மை, சினம் கொள்ளாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை போன்றவையே அவை. எனவே அவைகளைப் பற்றிய கருத்துக்கள் மட்டுமே இங்கு விளக்கப்படுகின்றன.

## அடக்கமுடைமை

அடக்கம் - அடங்குதல் - ஒடுங்குதல். செருக்கின் காரணமாக மனம், மொழி, மெய் இம்மூன்றும் தன்வழிச் செல்லாமல் அறிவின்வழி நின்று பண்படுதலே அடக்கமுடைமை எனப்படும்.

ஒருவருக்கு ஐம்பொறிகளின் மூலமாகவே இன்பமும் துன்பமும் உண்டாகிறது. ஆகையால் ஐம்பொறிகளை அடக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே வாழ்வு சிறக்கும் என்பதை, "**ஐவாய வேட்கை யவாவடக்கண் முன்னினிதே**" எனும் பூதஞ்சேந்தனாரின் பாடல்(26) உணர்த்துகிறது. "**அடக்கம் அமரருள் உய்க்கும்**" என்ற குறளும் (121) மனிதனது உயர்வும் தாழ்வும் அவனது அடக்கத்தைப் பொறுத்தே அமையும் என்றும் அதனால் செருக்கின்றி வாழவேண்டும் என்றும் கூறுகிறது. அவ்வாறு வாழ்பவனே தேவனாவான் எனவும் பகர்கிறது.